## டிசம்பர் - 5

**"யாரைச் சேவீப்பீர்கள் என்று இன்று தெரிந்து கொள்ளுங்கள்; நானும் என் வீட்டாருமோவென்றால், கர்த்தரையே சேவிப்போம்."**

**- யோசு 24 : 15.**

மற்றவர்கள் யாரை வணங்க, எதை வணங்கச் சித்தமுள்ளவர்களாயிருக்கிறார்களோ, அப்படியேச் செய்யட்டும். கர்த்தர் தயையுள்ளவரென்பதை ருசிபார்த்திருக்கிற நாம் அவருடைய வார்த்தையின் மூலமாகவும், அவருடைய பராமரிப்பின் மூலமாகவும் புதிதான ஜீவனுக்கு நம்மை ஊக்குவிக்கிற ஆவியின் வல்லமையின் மூலமாகவும் அவரை அறிந்து கொள்ள வந்திருக்கிற நாம் நம்முடைய தேவனை அல்லாமல் மற்ற தொன்றையும் பயபக்தியுடன் வணங்க முடியாது. அவரை பயபக்தியுடன் வணங்கி பூரணமாக அவரில் நம்பிக்கை வைக்க வேண்டும். அவரில் பூரணமாக நம்பிக்கை வைத்து நமக்காக அவர் குறித்திருக்கிற எந்த பாதையாயிருந்தாலும் அதில் சந்தோஷமாக நடப்போம். இவ்விதமாக நம்பி நடந்துக் கொண்டு நம்முடைய பங்கை எது என்று அறிந்தாலும், நாம் மனரம்மியமுடன் இருக்கிறோம். ஏனென்றால், நம்மை நடத்துகிற கரம் அவருடையது. இவ்விதமாக உண்மையுள்ள மேய்ப்பரை பின்பற்றி நாம் முடிவாக ராஜ்யத்தின் மந்தையை போய் சேருவோம் என்று உறுதி கொள்ளுவோமாக இப்படிப்பட்ட உறுதியில், நாம் பரதேசியாய் தங்கியிருக்கிற வீட்டிலேயும் நமக்கு சந்தோஷமும் சமாதானமும், இருதயத்தின் ஆசீர்வாதமும் உண்டு.

**- Z '01, 284 (R 2872).**

கர்த்தருடைய சித்தத்தை கண்டுகொண்ட பிறகு அதை நிறைவேற்ற உடனடியாக தீர்மானிப்பதே உண்மையுள்ளவர்களின் போக்காயிருக்கிறது. நன்மை தீமை சம்பந்தமாக கர்த்தரின் சித்தத்தைக் கண்டு கொண்டபிறகும், தேவனுடைய சித்தத்தைச் செய்ய தயங்குவது, ஓரளவு தீமைக்கு விட்டுக் கொடுப்பதும், ஓரளவுக்கு உண்மையில்லாதவர்களாய் இருக்கிறவர்களின் விசேஷ குணமாயிருக்கிறது. கர்த்தர் நீடிய பொறுமையுள்ளவராய் இருந்தாலும் முடிவில், இவர்களை ஒரு முடிவு எடுக்கக் காட்டாயப்படுத்துவார். ஏனென்றால், அவருடைய சித்தத்திற்கு ஏற்றாற்போலவோ அல்லது எதிராகவோ அவர்கள் தீர்மானிக்க வேண்டுமென்று அதற்கு ஏற்றவிதமாக அவர்களுடைய அனுபவங்களை உருவாக்குவார். ஆதிகாலத்து யோசுவாவைப் போல உண்மையுள்ளவர்கள் வார்த்தையின் மூலமாகவும் மாதிரியின் மூலமாகவும் ஓரளவுக்கு உண்மையில்லாதவர்களாயிருக்கிறவர்களை, நீதியுள்ள முடிவை எடுக்க உற்சாகப்படுத்த நாடுவார்களாக. ஆனால் இரண்டாவதாகக் கூறப்பட்டவர்கள் இவ்விதமாகக் கொடுக்கப்பட்ட உற்சாகத்தை ஏற்றுக் கொள்ளுகிறவர்களோ அல்லவோ, உண்மையுள்ளவர்கள் தங்களுடைய தலையாகிய கிறிஸ்துவுக்கடியில் தங்களுக்கும் உலகத்துக்கும் செத்தவர்களாய் தொடர்ந்து இருந்து இவ்விதமாக எத்தனைப் பேரை நாம் நடத்த முடியுமோ, அத்தனைப் பேரையும் நடத்தி கர்த்தரை சேவிப்போமாக.

**- P '35, 172.**

**ஒத்த வாக்கியங்கள் :-**

1ராஜா 18:21; எசே 20:39; லூக் 16:13; ரோம 6:16; ஆதி 18:19; யோவா 6:67-69; மத் 19:16-22; 26:33,35; யோசு 24:16-18; 23:15; 1நாளா 28:9.

**கோபுர வாசிப்பு :** Z '11, 78 (R 4780).

**வினாக்கள் :** நான் இந்த வாரத்தில் தீர்மானம் எடுத்துப் பழகினேனா? எவ்வாறு? எந்தச் சந்தர்ப்பங்களில்? பலன்கள் எவை?